

# “அதிகாரம் அற்றவர்களே மைனாரிட்டிகள்!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் ஆறாவது அமர்வில், ‘ஆமாம், மைனாரிட்டி தி.மு.க.தான்’ என்னும் தலைப்பில், கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அவர்கள் ஆற்றிய உரை :**



**எம்.எம்.அப்துல்லா, கழக அயலக அணிச் செயலாளர்**

“இந்த அமர்வில் எனக்கு வழங்கப்பட்டிருப்பது பத்து நிமிடங்கள். இந்த பத்து நிமிடங்களுக்குள் தி.மு.க. கிறிஸ்தவர்களுக்கோ இஸ்லாமியர்களுக்கோ மற்ற சிறுபான்மையினருக்கோ என்ன செய்தது என்று நிச்சயமாக நான் சொல்லப் போவதில்லை. கூகுள் செய்து பார்த்தால், அது உங்களுக்கே தெரிந்துவிடும். நான் பேச நினைப்பது, யார் மைனாரிட்டி ஏன் மைனாரிட்டியின் பக்கம் நாம் நிற்க வேண்டும் அப்படி நிற்பதால் நமக்கு நடக்கின்ற நன்மை என்ன என்ற மூன்றே விஷயங்கள்தான்.



### மைனாரிட்டி

முதலில் யார் மைனாரிட்டி? எண்ணிக்கையின் அடிப்படையில்தான் யார் மைனாரிட்டி என்பதை முடிவு செய்கிறோமா?

தலைவர் கலைஞர் முதல்வராக இருக்கின்றார். அப்போது, எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய டாக்டர் ஹண்டே பேசுகிறபோது, ‘இது ஒரு மூன்றாம் தர அரசு’ என்றார். அப்போது கலைஞர், ‘இது மூன்றாம் தர அரசு அல்ல, இது நான்காம் தர அரசு. படிநிலையில் பிராமணர், வைசியர், சத்திரியர், சூத்திரர் என்று நான்கு பேர் இருக்கும்போது, இது சூத்திரர்களுக்கான அரசாக இருக்கிறது. எனவே, இது நான்காம் தர அரசு’ என்று சொன்னார். 97 விழுக்காடு நாம்தான் இருக்கிறோம் அப்படியானால், நாட்டில் மூன்று விழுக்காடு மட்டுமே உள்ள பிராமணர்கள்தான் மைனாரிட்டியாக இருக்க வேண்டும். எண்ணிக்கை அடிப்படையில், பிராமணர்களை மைனாரிட்டிகள் என்று சொல்லிவிடலாமா?

### மைனாரிட்டி அரசு

இரண்டாவதாக ஓர் உதாரணம். 2006-இல் நாம் ஆட்சிப்பொறுப்பில் இருக்கிறோம். 118 என்கிற எண்ணிக்கை நமக்கு வேண்டும். ஆனால், அன்றைக்கு 96 இடங்களில்தான் வெற்றி பெறுகிறோம்; தோழமைக் கட்சிகளின் ஆதரவோடு நாம் ஆட்சிக்கு வந்துவிடுகிறோம். அப்போது ஜெயலலிதா நம்முடைய அரசை ‘மைனாரிட்டி அரசு’ என்று அழைத்தார். அப்போதும் தலைவர் கலைஞர் சொன்னார், ‘ஆமாம் இது மைனாரிட்டி அரசுதான், உரிமை இல்லாமல் இருக்கின்ற கிறித்தவர்களுக்காக, இஸ்லாமியர்களுக்காக, மொழிச் சிறுபான்மையினருக்காக நடக்கின்ற அரசு’ என்றார்.

எனவே, யார் அதிகாரமும் உரிமையும் அற்றவர்களாக இருக்கிறார்களோ அவர்கள்தான் மைனாரிட்டி. எண்ணிக்கையில் குறைவாக இருப்பவர்கள் மைனாரிட்டியே கிடையாது. இந்தப் புரிதல் இந்திய துணைக் கண்டத்தில் திராவிட இயக்கத்திற்கு மட்டுமே இருக்கிறது. இதை நான் நெஞ்சு நிமிர்த்தி சொல்லுவேன். கவிஞர் யுகபாரதி ‘மாமன்னன்’ படத்தில் ‘மலையிலதான்’ என்ற பாடலில் ‘படை இருந்தும் பயந்த சனம்’ என்று ஒரு வரி எழுதியிருப்பார். படை இருக்கிறது அவர்களிடம். ஆனால், பயமும் இருக்கிறது. அதிகாரமும் உரிமையும் இல்லாததால்தான் அவர்களிடம் அந்தப் பயம் வந்தது. எனவே, எண்ணிக்கையைவிட அதிகாரமும் உரிமையுமே முக்கியம். திராவிட இயக்கம் என்பது சமதர்மமும் சம உரிமையும்தான். ‘நான் உரிமை பெற வேண்டும். எனக்குக் கிடைத்த உரிமை உனக்கும் கிடைக்க வேண்டும்’ என்பதுதான் திராவிட இயக்கத்தின் அடிப்படை.

### பெண்கள் மேம்பாடு

யார் மைனாரிட்டி, ஏன் மைனாரிட்டியின் பக்கம் நாம் நிற்க வேண்டும் என்பதைச் சொல்லிவிட்டேன். மைனாரிட்டிகளுக்கு உரிமை கொடுப்பதால், என்ன நடக்கும் என்பதைப் பார்ப்போம்.

தந்தை பெரியாரைப் பொறுத்த அளவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வேண்டும் என்றார். நாட்டில் 100 பேர் இருந்தார்கள் என்றால், 50 பேர் ஆண்கள், 50 பேர் பெண்கள். சரிபாதியாக 50 பேர் இருப்பதால், பெண்கள் மைனாரிட்டி கிடையாது. எண்ணிக்கை அளவில் அவர்கள் மைனாரிட்டி கிடையாது. ஆனால், அவர்கள் அதிகாரம் அற்றவர்கள், அவர்கள் குரலற்றவர்கள். அவர்களுக்காகப் பெரியார் குரல் கொடுத்தார். பெரியார் பேசியவற்றை எல்லாம், சட்டமாக்குகின்ற வாய்ப்பை, காலம் கலைஞருக்குத் தருகிறது.

### உயர்கல்வி

பெரியார் வலியுறுத்திய, பெண்களுக்கான சொத்துரிமையைக் கலைஞர் அளிக்கிறார், 1989-இல் கலைஞர் ஆட்சிக்கு வந்தபோது, பெண் குழந்தைகள் பள்ளிகளில் இடைநிற்றல் என்பது அதிகமாக இருந்தது. பெண்கள் வயதுக்கு வந்துவிட்டாலோ அல்லது அந்தப் பெண்ணின் தாய்க்கு இரண்டாவது குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தையைப் பார்த்துக்கொள்ளவோ, பெண் குழந்தைகளைப் பள்ளியில் இருந்து நிறுத்தி விடுவார்கள். இதைத் தடுப்பதற்காகத்தான் கலைஞர் எட்டாவது வரை படித்த பெண்களுக்குத் திருமண நிதியுதவி திட்டத்தைக் கொண்டுவந்தார். அதன்பிறகு, பெண் குழந்தைகள் வயதுக்கு வந்தாலும் பரவாயில்லை என்று பள்ளிக்கு அனுப்பி வைத்தார்கள். எட்டாம் வகுப்பு என்பதை பத்தாம் வகுப்பு என்று கல்வித்தகுதியை உயர்த்தினார். பிறகு, பெண் குழந்தைகளைப் பத்தாம் வகுப்பு வரை, பிறகு பிளஸ் டூ வரை, கல்லூரி வரை என்று படிக்க வைத்தார்கள். அதன் விளைவு, இப்போது பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் என்றாலும், பிளஸ் டூ பொதுத்தேர்வு முடிவுகள் என்றாலும் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் பெண்களே முதலிடத்தில் தேர்ச்சி பெறுகிறார்கள்.

பெண்கள் படித்து வேலைக்குப் போனபிறகு, அவர்களின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் சம்பாதித்து பொருள்களை வாங்கும்போது பொருளாதாரமும் அதிகரிக்கிறது.

### பொருளாதார வளர்ச்சி

மைனாரிட்டியாக அதாவது, அதிகாரமும் உரிமையும் இல்லாமல் இருக்கக்கூடிய ஒரு பெண்ணுக்கு சமமாக இருக்க வேண்டும் என்ற உரிமையைக் கொடுத்ததால் இந்த நாடு வளர்ந்திருக்கிறது என்பதைத்தான் நாம் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. மைனாரிட்டிகளைச் சமமாக நடத்தும்போது, இந்த நாட்டினுடைய பொருளாதாரம் வளரும், இந்த நாடும் வளரும். இதை சாதித்துக் காட்டியதால்தான் இன்றைக்கு தமிழ்நாடு முதல் மாநிலமாக இருக்கிறது.

### நமது தத்துவங்கள்

இந்த நாட்டிலுள்ள 98 விழுக்காடு மக்கள் அடிமைப்பட்டுக் கிடந்தபோது, அவர்களை விடுவிப்பதற்காகத் தத்துவார்த்தரீதியாகச் சிந்தித்தது திராவிட இயக்கம். கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகள் நாம் ஒரு சிறு கூட்டத்திடம் உரிமையின்றி, கல்வியின்றி, வேலைவாய்ப்பின்றி அடிமைப்பட்டிருந்தோம்.

1967-இல் தி.மு.க. பெற்ற வெற்றி என்பது ஒரு இனத்தின் வெற்றி. கத்தியில்லாமல் இரத்தமில்லாமல் வெற்றிபெற்றோம். வன்முறையின் மூலமாக அல்ல, அறிவின் மூலமாகவே வெற்றி பெற்றோம். சமதர்மம், சமத்துவம், சமஉரிமை – நாளைக்கு இந்த இயக்கத்தினுடைய இளைஞர் அணிச் செயலாளர் இந்தியாவில் இருக்கின்ற அத்தனை மாநிலங்களுக்கும் இந்தத் தத்துவங்களை எடுத்துச் செல்வார். இந்தத் தத்துவங்கள் தேசம் முழுவதும் எதிரொலிக்கும்!” ●

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**பாரத் ஸ்ரீமன் அழகேசன் பதிவு :**

கோவையில் நான் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கையில், ‘உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு’ நடைபெற்றது. அதற்கடுத்த ஆண்டு, அ.தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்தது. சமச்சீர் பாட நூல்களின் பின்னட்டையில் இருந்த செம்மொழி வாழ்த்துப் பாடலை ‘பச்சை’ ஸ்டிக்கர் ஒட்டி மறைப்பதும், கலைஞர் மு.கருணாநிதி என்ற பெயர் நூலில் இருக்கும் இடங்களிலெல்லாம் கருப்பு மார்க்கர் கொண்டு அழிக்கும் பணியும் நடைபெற்றது. கருப்பு மார்க்கரை கையில் தொடவில்லை நான்.

இளைஞர் அணி சார்பாக ஆண்டுதோறும் நடைபெறும் அண்ணா பிறந்தநாள் விழாவில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகள் நடைபெறும். மனனப் போட்டியில் கலைஞரின் நெடுங்கவிதைகள் இரண்டைக் கொடுத்து, ஏதாவது ஒன்றைச் சொல்ல வேண்டும் என்பது போட்டியின் விதி. கலைஞரின் ‘புறநானூற்றுத் தாய்’ மற்றும் ‘ஆந்தையும் அரசனும்’ கவிதையும் கொடுத்ததாக நினைவு. பன்னிரண்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன் அப்பொழுது.

“ஒழுங்கா படிச்சு பாஸ் பண்ண மாட்டுற, இது எதுக்கு?” என்று பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் அந்தக் கவிதைப் பக்கங்களைத் தர மறுத்ததும், அப்போட்டியில் பங்கேற்ற இன்னொரு நண்பன் சிறப்பு வகுப்பு ஒன்றில், ‘புறநானூற்றுத் தாய்’ கவிதையை வாசித்துக் காட்ட, என்னுடைய நோட்டில் படியெடுத்து மனனம் செய்து பங்கேற்காமல் போனதும் வேறு கதை.

இப்பொழுது ‘முரசொலி’ குறித்து, முனைவர் பட்டம் மேற்கொள்கிறேன். அந்த ‘புறநானூற்றுத் தாய்’ கவிதை 1955-ஆம் ஆண்டு முரசொலி பொங்கல் மலரில் ‘மறத்தி’ என்ற தலைப்பில் இடம் பெற்றிருந்ததைக் காண்கிறேன்.

பன்னிரண்டாம் வகுப்பில் கிடைக்காத வாய்ப்பு 2025 ‘அறிவுத் திருவிழா’வின் வழி கைவந்து சேர்ந்திருக்கிறது. தி.மு.கழகத்தின் தலைமை நிலையங்கள் பற்றிய செய்திகளைக் கட்டுரையாக ‘அறிவகம் முதல் அறிவாலயம் வரை’ என்ற தலைப்பில், ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க அரிய ஆவணத்தில் எழுதியிருக்கிறேன். வயதிலும் அனுபவத்திலும் என்னைவிட பல மடங்கு மூத்த ஆய்வாளர்கள், அறிஞர்கள், அரசியலாளர்கள், இதழாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் பங்களிப்புகளுக்கு இடையே மிக இளையவனான எனது எழுத்திற்கும் இடம் கிடைத்திருக்கிறது எனில், இதைவிட பெரிய மகிழ்ச்சி என்ன வேண்டும் எனக்கு?